# Chapter - 14 - Speech for 27th August 2022 – 1

இந்த அத்தியாயத்தில் பகவான் Supermind பற்றியும், அதுவே இந்த பிரபஞ்சத்தைப் படைத்தது என்றும் விளக்குகிறார். அதற்கு Supermind எப்படி தன்னை இரு பகுதிகளாக பிரித்து apprehending Supermind , comprehending Supermind என்ற நிலைகள் மூலம், அல்லது அதன் செயல்கள் மூலம் படைத்தது என்பதை விளக்குகிறார்.

கர்மயோகி நாம் மாயை என்று பொதுவாக சொல்வதை பிரம்ம ஜீவியம் என்று குறிப்பிடுகிறார். என்றாலும் அந்த வார்த்தை சற்றே அந்நியமாக படுவதால் நாம் பொதுவாக அறிந்த மாயை என்னும் வார்த்தையைப் பொருத்தி பார்க்கும் போது, ஆரம்பத்தில் நாம் அறிந்த பொருளில் பார்த்தாலும், அதன் பார்வையை, புரிதலை direction and perception -ஐ மாற்றினால் நம்மால் ஓரளவு அதன் பொருளை புரிந்துக் கொள்ள முடிகிறது. அது போல comprehending supermind -ஐ அனந்த ஜீவியம் என்றும் apprehending supermind -ஐ ஆனந்த ஜீவியம் என்றும் குறிப்பிடுகிறார். Supermind -ஐ சத்திய ஜீவியம் என்று குறிப்பிடுகிறார். நான் பலமுறை சொன்னது போல நான் கற்கும் Life Divine என்னும் தலைப்பு எனக்கு பல சுதந்திரத்தை கொடுக்கிறது. நான் தத்துவமாக புரிந்துக் கொள்ளும் விதத்தை, அதை என் வாழ்வில், எனக்கு தெரிந்தவர்கள் வாழ்வில் பொருத்தி பார்த்து புரிந்துக் கொண்டதை பகிர்ந்து கொள்ளும் சுதந்திரத்தை அளிக்கிறது. அதனால் இந்த வார்த்தைகளையும் புரிந்துக் கொள்ளும் அளவிற்கு எளிமைப்படுத்தி, எடுத்துக் கொள்கிறேன்.

மற்ற மனதின் நிலைகளை, மேல் மனம், ரிஷிமனம், ஞானி மனம், தெய்வ மனம், என்றெல்லாம் குறிப்பிடுவது போல இங்கு சத்திய ஜீவியம் என்பதை அதிமனம் என்று எடுத்துக் கொள்கிறேன். Comprehending Supermind என்பதை தொகுத்தறியும் சித்தம் என்றும், apprehending Supermind என்பதை பகுதித்தறியும் சித்தம் என்றும் எடுத்துக் கொள்கிறேன். இவை எல்லாம் சமர்ப்பணன் உபயோகப்படுத்தும் பல சொற்களில் எனக்குப் புரிந்தது, பொருத்தமானது என்று நினைத்தவற்றை எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையாக சிந்தித்து இங்கு பகிர்ந்து கொள்கிறேன். காரணம் என்னவென்றால் காந்தி பெரிய மனிதர் என்று சொன்னால், என்னை போன்ற அறிவிலிகள், அவர் உயரமான அல்லது குண்டான மனிதர் என்று புரிந்துக் கொள்வோம். அதுவே காந்தி ஒரு மகாத்மா என்றால், ஏதோ நான் அறிந்த அளவில் நல்ல ஆத்மா அல்லது நல்ல உள்ளம் படைத்தவர் என்று எடுத்துக்

கொள்வேன். இப்படி வார்த்தைகளின் அடிப்படையில் சிந்தித்து Life Divine-ஐ புரிந்துக் கொள்ள முடியாது என்றாலும், பகவான் இந்த அத்தியாயத்தில் சொல்வது போல இரண்டாவது , மூன்றாவது பாராவில் சொல்வது போல, நமக்கு எங்காவது ஒரு ஆரம்பம் வேண்டும். இது போன்ற உயர்நிலைகளை நாம் எட்டுவது கடினம் என்றாலும், அது எட்ட முடியாததோ, புரிந்துக் கொள்ள முடியாததோ அல்ல என்று பகவான் இங்கே குறிப்பிடுகிறார். அது மிகுந்த தைரியத்தையும், நம்பிக்கையும் தருகிறது.

அடுத்தது, கர்மயோகி தந்த விளக்கங்கள் நம்மை ஏதோ ஒரு உயர்ந்த ஆன்மீக அறிவை பெற்றுவிட்டதாக நம்ப வைகின்றன.  காரணம் இந்த அதிமனதை பற்றி பகவான் சிஷ்யர்களுடன் மாலையில் உரையாடும் போது- பிரதான சிஷ்யர்கள் என்று சொல்லப்படுபவர்களே- அதிமனம் வந்தால் என் நரைமுடி கறுப்பாகுமா, நான் பொன் நிறத்தில் மாறுவேனா என்றெல்லாம் கேட்பார்கள். அதிலும் ஒருவர் அதிமனம் வந்தால் நான் இறவாமை  பெற்று விட்டால் அஸ்வத்தாமன் போல ஆகிவிடுவேனா. இன்று அஸ்வத்தாமன் எங்கே இருக்கிறார் என்றெல்லாம் கேட்பார்.  நிச்சயம் அந்த மாதிரி கேள்விகள் எல்லாம் கேட்கும் நிலையில் இருந்து நாம் வெளியே வந்து விட்டோம் என்றே நினைக்கிறேன். அதனால் பகவான் சொல்லும் மனதைத் தாண்டி உள்ளுணர்வு, உட்பார்வை, போன்றவற்றின் மூலம் இதை ஆரம்பிக்க முடியும் என்பதை எடுத்துக் கொண்டு, இதை பற்றி சிந்த்தித்தேன். இதற்கு மேலும் அடுத்ததடுத்த PARAகளில் மனதுக்கும் அதிமனத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அதிகம் விளக்குகிறார்.

மனதின் வரையறை, அதிமனதின் வரையறையற்ற தன்மை, மனதின் பிரிவினைப் பார்வை, அதிமனதின்  வேறுபாடை பார்க்கும் பார்வை போன்றவற்றை விளக்குகிறார். அவற்றைப் பற்றி mind and Supermind போன்ற அத்தியாயங்களில் பார்க்க போவதால், இங்கு அதிமனதை பற்றி மட்டும் பார்க்கலாம்.

நம் மனதுக்கு அப்பால் உள்ள ஒரு பிரம்ம சித்தமும், பிரம்ம ஞானமும், ஒன்றாக உள்ள ஒரு சக்தியே, அதன் ஆற்றலே இந்த பிரபஞ்சத்தை சிருஷ்டித்தது. நம் மனம் நம் வாழ்வை படைத்தது போல இந்த ஆற்றல் அதன், ஞானம், அதன் மூலம் ஒரு ஆனந்தத்தை பெற வேண்டும் என்ற உறுதி இந்த பிரபஞ்சத்தை படைத்தது. அந்த நிலைதான்  Supermind அதிமனம். அதாவது பிரம்மனுக்கும் அவன் படைப்புகளுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள ஒரு ஆற்றல். பிரம்மத்திற்கும், அதன் படைப்பான பிரபஞ்சத்திற்கும் பாலமாக, சித்தப்பூர்வமாக இருக்கும் ஒரு ஆற்றல் அதிமனம்.  இது ஏதோ ஒரு

உயர்ந்ததாக, எங்கோ , வானத்தில் இருப்பதாக நாம் மரபு படி சிந்தித்து புரிந்துக் கொள்வது தவறு. இதுவும் நம்முள்ளே இருப்பது நமக்கு உரித்தான ஒரு நிலை தான். நம்மால் எட்ட முடிந்தது தான் என்று தைரியத்தை, நம்பிக்கையை பகவான் நமக்குத் தருகிறார். நாம் நம்மை நம் சித்தத்தில் முன்னேற்றும் போது, நம்மை நாமே மனப்பான்மையில் விரிவுபடுத்திக் கொள்ளும் போது, செயலில் செம்மை perfection -ஐ கொண்டு வரும் போது, என்று நம்மை, நம் சுபாவத்தை கடக்கும் இடங்களில்  எல்லாம் இதை உணர முடியும் என்கிறார்.

அதிமனம் சத் சித் ஆனந்தத்தில் இருந்து வந்தது - அது பற்றி சித்த பூர்வமாக இருக்கிறது, அஸத்தின் வரையற்ற தன்மை சத்தின் சத்தியத்தை பற்றிய ஞானம் , அது பெற நினைக்கும் ஆனந்தத்தை பற்றிய உறுதி ஆகியவற்றை பற்றிய முழுமை - இது மூன்றும் வெளிப்படும் போது ஒரு ஒருமை பிரம்மத்துடன் ஒன்றுவது என்னும் முழுமை ஆகியவற்றை பற்றிய கருத்தை சித்தப்பூர்வமாக பெற்று இருக்கிறது. அதற்கேற்ற உலகை, வடிவங்களை, செயல்களை படைக்கிறது.  இது அதன் Real Idea என்று அழைக்கப்படுகிறது. இதை தான் Process of Creation என்று அழைக்கிறார்.

இந்த வார்த்தைகளை ஆழமாக புரிந்துக் கொள்ள என் வாழ்வில் நடந்த விஷயங்களில் இதை பொருத்தி பார்க்கிறேன். இதன் அடிப்படை என்னவென்றால், நாம் மனம், உணர்வு, ஜடம் என்னும் வார்த்தைகளை ஏதோ ஒருவிதத்தில் புரிந்துக் கொண்டுள்ளோம். விளக்க முடியவில்லை என்றாலும் ஏதோ ஒரு அளவில் இவற்றை புரிந்துக் கொண்டுள்ளோம். அல்லது உணர்கிறோம். அது போல அதிமனமும், Supermind -ம் நம்முள்ளே தான் உள்ளது என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். உணர்ந்து அதைக் காண வேண்டும், நம் பிரபஞ்சம், நம் படைப்பின் நோக்கம், ஆகியவை முழுமை அடைய வேண்டும் என்றால், நாம் அந்த அதிமனதை புரிந்து, அதுவே இந்த படைப்புகளுக்கு பின்னால் இருக்கிறது என்பது புரிந்து, அதை reference point ஆக எடுத்தே செய்ய வேண்டும். அதுவே ஆனந்தத்திற்கு வழி வகுக்கும். அப்படி செய்யும் போது எங்கோ இருப்பதாக நாம் நினைக்கும் அது, நம் நெஞ்சில், இருதயத்திற்கு பின்னால் வந்து தங்கி விடும் என்கிறார் பகவான்.

உதாரணமாக ஒரு காருக்கு எத்தனையோ பாகங்கள் இருக்கிறது. அனைத்து பாகங்களையும் வாங்கி ஒரு பெரிய தொட்டியில் போட்டால், காரின் அத்தனை பாகங்களும் அதில் உள்ளது அதனால் அது கார் என்று சொல்ல முடியுமா. அவை இணைய, அதன் படைக்கப்பட்ட நோக்கமான பயணங்களுக்கு உதவ, ஒரு புறம் காரின் பாகங்களை பற்றி  தெரிந்த - அது

படைக்கப்பட்ட நோக்கம் தெரிந்த ஞானம், மறுபுறம் அதை உபயோகப் படுத்த போகும் படைப்புகளை பற்றிய ஞானம், இரண்டையும் முழுமை பெற வைக்கும் உறுதி ஆகியவை வேண்டுமானால் ,அதன் சூட்சும ஞானனமாக automobile , அல்லது mechanical engineering ஞானமும் வேண்டும். அது படைக்கபட்டதின் நோக்கம், சட்டம், இலக்கணம் ஆகியவற்றின் நோக்கில் வெளிப்பட வேண்டும். அப்போது தான் காரும், மனிதனும் பெற நினைத்த ஆனந்தத்தை  பெற முடியும். எதற்காக அது படைக்க பட்டதோ அதற்காக அது பயன்  பட முடியும்.

நாம் மனம், உணர்வு, உடல் என்று பகுதிகளை வைத்துக் கொண்டு முழுமையை பற்றிய ஞானமில்லாமல், தொட்டி என்னும் வாழ்வில் ஓடிக் கொண்டு இருக்கிறோம். அவற்றின் ஞானம், உறுதி அதிமனதில் இருக்கிறது என்று சித்தப்பூர்வமாக நாம் இருந்தால், பிரம்மம் விரும்பும் பரிணாம முன்னேற்றம் நம்மில் வரும். அப்படி சித்தப்பூர்வமாக இருப்பதையும் நாம் உணர வேண்டும். உதாரணமாக நான், அண்ணன், அப்பா, அன்பர், நண்பர், கணவர், மகன் , முதலாளி, தொழிலாளி என்று பல வடிவங்களில் இந்த பிரபஞ்சத்தில்  இருக்கிறேன். ஒவ்வொன்றுள்ளும் என் நடத்தை, மனப்பான்மை, வெளிப்பாடு வேறு. ஆனால் அந்த வடிவங்களில்  எல்லாம் ரமேஷ்குமார் என்னும் அடிப்படை மாறி இருக்காது.  இந்த வெவ்வேறு வடிவங்களில்  என்னை பார்ப்பவர் எல்லோருக்கும் அடிப்படையில் நான் ரமேஷ் என்னும் விஷயம் புரியும். அது போல நாம் பல பாகங்களால் இருந்தாலும் அனைத்துக்கும் அடிப்படை அதிமனம் என்பது நமக்குத் புரிய வேண்டும். நம்மை நாமே அப்படி பார்த்துக் கொள்வது மட்டுமல்ல. எல்லோரையும் அப்படி பார்க்க  முடிந்தால் அதுவே பகவான் அலிப்பூர் சிறையில் பெற்ற நாராயண தரிசனத்திற்கு உதாரணமாக இருக்கும்.

இன்னொரு உதாரணம் மூலம் சத் சித் ஆனந்தத்திலிருந்து பகுத்தறியும் சித்தம் வரைப் பார்க்கலாம். நான் அடிக்கடி என் கம்பெனி பற்றிய உதாரணத்தை எடுத்துச் சொன்னாலும், அந்தந்த அத்தியாயத்திற்கான context - ஏற்றாற்போலவே எடுத்துக் கொள்கிறேன்.

நான் பிரம்மம் , ஒரு நாள் மிகப் பெரிய ஆனந்தத்தை அடைய நினைக்கிறேன். அப்போது என்னுடைய ஞானம் மற்றும் எனக்கு முன் உள்ள choice ஏராளமாக, infinity என்று சொல்லும் அளவிற்கு இருக்கிறது.  அதாவது Masonary , Catering , Chemical , Electronics  என்று ஏராளமான விஷயங்களை பற்றிய ஞானம் இருக்கிறது. அது அஸத் . அதிலிருந்து ஒன்றை எடுத்து - chemcial மூலம் ஆனந்தம் பெற நினைக்கிறேன். அது சித் . நான் பண்புகளை

உண்மைகளை ஒட்டி பெறுகிறேன். அது ஆனந்தம். நான் அந்த ஆனந்தத்தை அனுபவிக்க கம்பெனி ஆரம்பிக்க ஏராளமான திட்டங்கள் தோன்றுகின்றன. அதற்கான ஞானம் என்னிடம் இருக்கிறது. அதை செய்து விட வேண்டும் என்னும் உறுதி பிறக்கிறது. அதற்கு தேவையான வடிவத்தில் கம்பெனியை உருவாக்குகிறேன். அதுவே என் உலகமாகிறது. இந்த நிலைக்கு, அதாவது கம்பெனி படைக்கப்பட்ட நிலைக்கு முந்தைய நிலையில் அதிமனம் இருப்பது இப்போது நன்றாகப்  புரியும். இதற்கு தேவைப்படும் பொருட்கள், தேவைப்படும் மனிதர்கள், அதற்கு பயன்படுத்த வேண்டிய technology , strategy , அதற்குப் பெற வேண்டிய licence முறைகள் என்று ஏராளமான விஷயத்தை கம்பெனி, ஆனந்தம் ஆகியவற்றின் பார்வையில் இருந்து நகராமல், அதை ஒட்டியே இருக்கிறது. அதை நான் மறப்பதே இல்லை. அது comprehending mind . தொகுத்தறியும் சித்தம் என்று எடுத்துக்கொள்ளலாம்.. இதை நான் வெளிப்படுத்த நினைக்கும் போது, அதற்கான வடிவங்கள், மனிதர்களை, வேலைக்கான ஆட்களை நியமிக்கிறேன். சூழலை உருவாக்க தேவைப்படும் அளவுக்கு நிலம் வாங்குகிறேன். கட்டிடம் கட்டுகிறேன். மிஷின் வாங்குகிறேன். இவையெல்லாம் என் மனமே. அதன் வெளிப்பாடே.  ஆனால் அதிமனம், அதன் ஆனந்தம் ஆகியவற்றின் பார்வையில் பகுத்தறிந்து வெளிப்படுகிறது.. இதை apprehending supermind. பகுத்தறியும் சித்தம் என்று எடுத்துக்கொள்ளலாம். நம் வாழ்வில் நாம் அதிசயம், முன்னேறியதாக நினைக்கும் இடங்களை அந்த பார்வையில் பார்த்தால் இக்கருத்தை புரிந்துக் கொள்ள முடியும்.

இதையே என் தொழிலாளியின்  பார்வையில் பார்க்கும் போது Manager , Supervisor , labours என்று இருக்கிறார்கள்.  அவர்கள் மனதில் salary , incentive , promotion  என்று இருக்கிறது. அது நமக்கு நம் மனம், உணர்வு, ஜடம், உடல் தெரிவது போல வெளிப்படையாகத் தெரிகிறது.  ஆனால் வேலையை அவர்கள் அவர்களுக்காக செய்வதாக நினைத்தாலும் உண்மையில் அவர்கள் செய்வது பணம், மார்க்கெட், production , quality என்ற சூட்சுமமாக விஷயங்களுக்கு அல்லது பின்னணியில் உள்ள ஒரு விஷயத்திற்கு செய்கிறார்கள். அதில் எந்த அளவு அந்த கம்பெனிக்கான பண்புகளை, சட்டங்களை கடைபிடிக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் முன்னேறுகிறார்கள்.  ஊதியம், promotion  போன்ற ஆனந்தம் கிடைக்கிறது.

ஆனால் நன்றாக யோசித்துப் பார்த்தால், நான் தான் இத்தனையும் அவர்கள் மூலம் செய்கிறேன். என் கம்பெனி, என் படைப்பாற்றலால் வந்தது. அதை ஏற்படுத்திய து  என் சித்தம், அதன் மூலம் நான் சாதிக்க நினைத்த, பெற நினைத்த ஆனந்தம் என்று உண்மையில் அனைத்தையும் நான் தான்

செய்கிறேன். நானில்லாமல், என் சித்தம் இல்லாமல், இந்த கம்பெனி இல்லை என்பது தெளிவாக புரியும். இதை அப்படியே அதிமனதில் பொருத்தி பார்ப்போம். நான் செய்தேன், நான் செய்தேன் என்று நினைத்ததெல்லாம் இப்போது யோசித்து பார்த்தால், நான் செய்யவில்லை, பின்னணியில் அல்லது உள்ளே இருந்து ஏதோ ஒன்று ஏதோ ஒரு நோக்கத்திற்காக அனைத்தையும் செய்தது தெரிகிறது. காரணம் என் செயல், படைப்பு அனைத்தும் என் பகுதி. அதில் என் உணர்வு, அறிவு, செயல் வெளிப்பட்டது போல, அதிமனமும் வெளிப்பட துடிக்கிறது. அதன் REAL ideaவும் ஆனந்தமும் வெளிப்பட துடிக்கிறது. அது முடியாத போது தன்னை முரண்பாடு, துன்பம் மூலம் திரும்பிப் பார்க்க வைக்கிறது. எப்போதும் என் கம்பெனி, அதன் அடிப்படை பண்பு, சட்டம் ஆகியவற்றை மட்டுமே நோக்கமாக வைத்து செய்யும் தொழிலாளி விரைவில் அந்த அந்த கம்பெனியின் பகுதி ஆகி விடுகிறான். அல்லது அதே போன்ற கம்பெனி ஒன்று தொடங்குகிறான். அந்த பார்வை அதிமனதின் தொகுத்தறியும் பார்வை. Comprehending Supermind . நான் முன்பே சொன்ன உதாரணம் தான். நான் ஒரு கம்பெனியில் வேலை பார்த்த போது மனித சுபாவத்தில் படித்தேன் - உன்னால் உன் முதலாளியை அன்னையாக நினைக்க முடிந்தால் அல்லது அவர் சித்ததத்தை தொட முடிந்தால், ஒரே வருடத்தில் அதே கம்பெனிக்கு partner ஆகலாம் அல்லது அதே போல ஒரு கம்பெனியை உருவாக்கி அதற்கு தலைவர் ஆகலாம் என்றார். அதையே செய்த போது, அதனால் என் முதலாளி என்னை exploit செய்த போதும், எனக்கான incentive -ஐ சரியாக தராத போதும் கர்மயோகியிடம் சொல்லி விட்டேன் என்பதற்காக செய்தேன். ஒரு கட்டத்தில் அவர் வருமானத்தை விட அதிகமாக எனக்கு incentive தரவேண்டி வந்தது. அதனால் லாபத்தில் பங்கு என்று பேசி partner ஆக்குகிறார். இன்னொரு முறையும் அது நடந்தது. நான் chemical field -இல் வந்த பிறகு ஒரு இளம் வயது engineer -ஐ பார்த்தேன். மிகுந்த திறமையும், ஆர்வமும் இருந்தது. சொந்த கண்டுபிடிப்புக்காக சிலவற்றை செய்து வைத்து இருந்தார். என்றாலும் அதை பயன்பாட்டிற்கு கொண்டு வர முடியவில்லை. நான் அவர் மனநிலையில் இருந்து பார்த்து அவருக்கு அதை சரி செய்து மார்க்கெட் செய்ய கூடிய product ட்டாக மாற்றிக் கொடுத்தேன். சில ஆண்டுகள் வியாபாரம் செய்து நல்ல நிலைக்கு வந்த போது என்னை கேட்காமலேயே அந்த கம்பெனிக்கு என்னை director ஆக்கி விட்டார்.

இதை கேள்விப்பட்ட கர்மயோகி - உனக்கு பிறரின் consciousness -ஐ , சித்தத்தை தொடுவது என்பது தெரிந்து இருக்கிறது. நீ ஏன் L&Tயின் Chairman, MDயின் சித்தத்தை தொட முயலக் கூடாது என்றார். அப்போது L&T 6000 கோடி

turnover உள்ள கம்பெனியாக இருந்தது. நான் அவர்களுக்கு ஒரு சிறு contractor என்றாலும் முயன்றேன். ஒரு inch கூட முன்னேற முடியவில்லை. அதாவது நாம் ஏதாவது ஒன்றில் ஒன்றுவதன் மூலம் தான்  அதாகவே ஆக முடியும். அதற்கு அதன் சித்தம், நோக்கம், சட்டம், பண்புகள், அது ஏன் இருக்கிறது, எப்படி செயல்படுகிறது என்பது புரிய வேண்டும். புரிந்தால், அது இருக்கும் அதே நிலைக்கு நாம் உயர முடியும். அங்கேயே தங்க முடியும். அதை தான் கர்மயோகி நீயே அன்னையாக முடியும். அவரைத் தாண்டிச் செல்லவும் முடியும் என்கிறார்.  அதனால் அதிமனதுடன் எப்போதும் தொடர்பில் இருந்து அதன் நோக்கம், சட்டம், பண்புகள், ஆகியவற்றின் மேலேயே  நம் மனம் இருந்தால் அது தொகுத்தறியும் மனம்.

நான் சொன்ன முதல் கம்பெனியின் partner ஆன பிறகும் , எனக்குத் தர வேண்டிய லாபத் தொகையை சரியாக கொடுக்கவில்லை. Capital  expenses -ஐ எல்லாம், அதாவது மிஷின்கள் வாங்கியதைக் கூட செலவு கணக்கில் சேர்த்து லாபத்தை குறைத்துக் கொடுத்தார். கர்மயோகியிடம் நான் வெளியே வந்து விடட்டுமா என்று கேட்டேன். அவர் இல்லை, வந்தால் என்ன செய்ய வேண்டும், எப்படி செய்ய வேண்டும், உன் நோக்கம், அதை அடையும் வழி ஆகியவற்றில் தெளிவாக இரு, அது சம்மந்தமாக மேலும் கற்றுக் கொள், பின் அதை அன்னையிடம் சொல்லி சமர்ப்பணம் செய். வாழ்வு initiative எடுக்கட்டும் என்றார்.  அதன் படி சுமார் 5 மாதம் பல்லை கடித்துக் கொண்டு என்பார்களே அப்படித் தள்ளினேன். ஒரு நாள் முதலாளியே என்னை வெளியேறச் சொன்னார். இந்த கம்பெனி-ஐ ஆரம்பித்தேன். இன்று வரை அது ஆனந்தத்தை தந்துக் கொண்டு இருக்கிறது. அதில் வெளிப்படுவது பகுத்தறியும் சித்தம் என்று புரிந்துக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு கேள்வி வரலாம். அப்படியென்றால் இந்த பகுத்தறியும் சித்தம் வெளிப்பட அந்த ஐந்து மாத காலம் துன்பம் தானே. ஆனந்தம் கிடைக்கவில்லையே என்ற கேள்வி வரலாம். அதிமனம் தான் அத்தனை வடிவங்களையும் பிரபஞ்சத்தையும் படைத்தது என்பதால் அதன் ஆனந்த அம்சம் எப்படியும் வெளிப்படலாம் என்பதை பிறகு புரிந்துக் கொண்டேன்.

அந்த ஐந்தாவது மாதத்தில், நான் வேலை செய்த கம்பெனிக்கு ஒரு அழைப்பு வந்தது. கவுஹாத்தியில் இருக்கும் ஒரு இந்திய ராணுவத்திற்கு சொந்தமான இடத்தில் ஒரு வேலை செய்ய வேண்டுமென்ற ஒரு அழைப்பு வந்தது. அதை பார்த்து quotation , மற்றும் systems தரவேண்டும். வழக்கமாக முதலாளி தான் இதற்கெல்லாம் செல்வார். ஆனால் அவர் அவசரமாக சிங்கப்பூர் செல்ல வேண்டி இருந்ததால், கடைசி வேலையாக என்னை போகச் சொல்லி

இருந்தார். வழக்கமாக எனக்கு வழங்கப்படுவது train -இல் second class ticket தான். கல்கத்தாவிற்கு second class ticket -இல் செல்வது என்பது எப்படிப்பட்ட கொடுமை என்பது சென்று பார்த்தவர்களுக்குத் தெரியும். ஆனால் அவருக்கு பதிலாக நான் செல்வதால் Consultant என்னையும் பெரிய engineer என்றே நினைத்து flight இல் ticket போட்டு கொடுத்தனர். என் வாழ்நாளில் விமானத்தை அண்ணாந்து மட்டுமே பார்த்த நான், அன்று முதன் முதலில் விமானத்தில் சென்றேன். விமானமல்ல, உண்மையிலேயே வானத்தில் பறப்பதை போல உணர்ந்தேன். ஒரு படத்தில் சந்தானமும், உதயநிதியும் நடந்துக் கொள்வார்களே அப்படி நடந்துக் கொண்டேன். அது, முதல் ஆனந்தம்.

அடுத்தது அங்கு இருந்து site க்கு local jeep இல் சில சினிமாக்களில் பார்ப்பது போல , ஆடு, கோழி, காய்கறி, மக்கள் என்று 48 மணிநேர பயணத்தில் தான் செல்ல முடியும். ஆனால் நேரமில்லாததால், ராணுவ helicopter ஏற்பாடு செய்து அதில் என்னை அழைத்துச் சென்றார்கள். கல்கத்தா முதல் அசாம், கவுஹாத்தி வரை தாழ்ந்த உயரத்தில் இருக்கும் நதி, மலை, காடு என்று இயற்கையை ரசிக்கும் அந்த நிலை பெரும் பணம் வசதி, அதிகாரம் இருபவர்களுக்குக் கூட கிடைக்குமா என்பது சந்தேகமே. அது ஒரு ஆனந்தம்.

அடுத்ததாவது - five star hotel போன்ற ராணுவ guest house இல். எல்லாம் நான் கனவிலும் நினைக்காதது. ராணுவ வேலைக்கு வந்ததால் - அந்த guest house ஊழியர்கள் விழுந்து விழுந்து கவனித்தார்கள். இந்த பக்கம் ஜூஸ், அந்த பக்கம் பலவகை சாப்பாடு என்று அனுபவித்து முதன் முதலில் பார்த்த jacuzzi இல் குத்தாட்டம் போட்டு ஆனந்தமடைந்தேன்.

அதே காலகட்டத்தில், முதலாளியின் நண்பர் coimbatore இல் இருந்தவர் சென்னையில் ஒரு அலுவலகம் தொடங்க இடம் பார்த்து வைத்து இருந்தார். ஏதோ ஒரு காரணத்திற்காக அவரால் ஆரம்பிக்க முடியவில்லை. என் முதலாளி என்னை அந்த அலுவலகத்தை வாரம் ஒரு முறை பார்த்து சுத்தம் செய்து விட்டு வா என்றார். நான் என் அலுவலகத்தை சுத்தம் செய்பவரை அனுப்பினேன். அவர் ஒரு ஆறு மாதம் சுத்தம் செய்து வந்தார். சரியாக செய்தாரா என்று மட்டும் கேட்டுக் கொள்வேன். அது எங்கே இருக்கிறது என்று கூட எனக்கு அப்போது தெரியாது. பிறகு காலி செய்து விட்டனர். நான் என் சொந்த கம்பெனி ஆரம்பித்த போது அலுவலகத்திற்கு இடம் தேடிக் கொண்டு இருந்த போது, broker ஒரு இடம் காட்டினார். அது எனக்கு பிடித்து அங்கேயே ஆரம்பித்தேன். அது நான் சுத்தம் செய்ய ஆள் அனுப்பிய இடம் என்று பிறகு தான் தெரிந்தது.

இந்த இரண்டும் பகுத்தறியும் சித்ததத்தால் வந்த பலன். நான் அந்த ஐந்து மாதமும் பிடிக்கவில்லை என்றால் கூட முதலாளியின் சித்தத்தில் ஒன்றி தேவையான பண்பை வெளிப்படுத்திய பலன். அதிமனம் பிரபஞ்சத்தின் முழுமை, படைப்புக்கு காரணம் என்பதால் நான் வேலை செய்த ஆபீஸ், அதன் systems, மற்றும் நான் சுத்தம் செய்த இடம் அனைத்தும் என்னை மறக்காமல், முதலாளி மறந்தாலும் தான் மறக்காமல் அதற்கான ஆனந்தத்தை அவை தந்து விட்டன. எந்த உயர் சித்தத்திலும் நாம் ஒன்றுவதால் , எதனுடனும் ஒரு ஒருமையை உணருவதால் அதற்கான ஆனந்தத்தை அவை தந்து விட்டன.

ஆனால் அவை வெளிப்படும் போது, அது அதன் முழுமை அழியாதவாறு வெளிப்பட வேண்டும். அதனால் தான் இடையில் கை விடாதே, இறுதி வரை செல் என்று பல கட்டுரைகளில் கர்மயோகி எழுதுகிறார். உதாரணமாக நாளை 6.00 மணிக்கு Life Divine கூடல் உண்டு என்பதை - உண்டு - Life Divine மணிக்கு ஆறு கூடல் என்றால், எல்லா வார்த்தைகளும் அதில் இருக்கிறது என்றாலும் அதன் பொருள், கருத்து, நோக்கம் அனைத்தும் மாறிவிடும். அது சரியாக பலன் தரவேண்டுமென்றால், மொழி, இலக்கணம், அதன் சட்டம், அதை வெளிப்படுத்தும் நம் மனதின் தெளிவு, அறிவின் திறமை ஆகியவை வேண்டும். அப்போது தான் அது முழுமை ஆகிறது. அது போல அதிமனதின் பண்புகளை நாம் வெளிப்படுத்த வேண்டுமானால், நமக்கு அதன் சட்டம், நோக்கம், ஏன் இருக்கிறது, எப்படி செயல்படுகிறது என்பது புரிய வேண்டும். அதன் மொழி, மனப்பான்மை மற்றும் அதிர்வுகள், attitude and vibration என்று நமக்கு புரியவேண்டும். அப்படி இல்லையென்றால் இப்போது நம்மில் பெரும்பாலோர் இருப்பது போல அன்னை என்றால் Joy - ஆனந்தம் என்று இல்லாமல், மரபு, உறவு, சூழல், பக்தி, சமுதாயம், விசேஷங்கள், சம்பிரதாயங்கள் என்று அனைத்திலும் ஒரு வித பயத்தோடேயே இருக்க வேண்டி இருக்கும்.

இந்த உதாரணங்கள் மூலம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், நமக்கு, மனம், உணர்வு, உணர்ச்சி, ஜடம், உடல், என்பது பற்றியெல்லாம் ஒரு புரிதல் இருப்பது போல, அதிமனதைப்பற்றிய ஒரு புரிதலும் இருக்க வேண்டும் என்பது தான். இவையெல்லாம் நம் பகுதியாக, நம்முள் இருப்பதாக நாம் எப்படி நம்புகிறோமோ, அப்படி அதிமனமும் நம்முள் தான் இருக்கிறது என்பதை நம்ப வேண்டும். வேறு எங்கோ, வானத்தில் இருப்பதாக நினைக்காமல் நம்முள் உள்ளதை உணர வேண்டும்.

அதாவது அதிமனம் ஒரு முழுமை மூலமாக வெளிப்பட்டது சிருஷ்டி. அதாவது பிரம்மத்தின் ஒரு அம்சமாக வெளிப்பட்டது அதிமனம். பிரம்மத்துடன் எப்போதும் தொடர்பு கொண்டது அதிமனம். இந்த இரண்டு கருத்துகளின் அடிப்படை புரிந்தால், இந்த அத்தியாயத்தை புரிந்துக் கொள்ளலாம். பகவான் சொல்ல வந்ததை புரிந்துக் கொள்வோமா என்று தெரியாது. ஆனால் நடைமுறையில் பெற , அந்த நிலைக்கு உயர அதை வெளிப்படுத்த தேவையான அளவு புரிந்துக் கொள்ள முடியும்.

சாதாரணமாக மனம் என்று சொன்னால் நமக்கு ஒரு புரிதல் இருக்கிறது. சுபாவம் என்று சொன்னால் அதற்கும் ஒரு புரிதல் இருக்கிறது. மனம் என்ன ஞானம் பெற்று இருந்தாலும், உறுதி இருந்தாலும், நம் சுபாவமே அதை கட்டுப்படுத்துகிறது. அது கட்டுப்படுத்துவது நம் சுயநலம், ஆசை, விருப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு ஆகியவற்றுடன் ஒன்றி அந்த பார்வையில் எப்போதும் பார்த்தே கட்டுப்படுத்துகிறது. அது போல அதிமனம் எப்போதும் சத்சித் ஆனந்தத்தை பார்த்தே கட்டுபடுத்துகிறது. ஞானம் அதன் சொரூபம், உறுதி அதன் சுபாவம் - அதற்கான ஆற்றல், வடிவம், form and power மூலம் அதை செய்கிறது. அப்படி என்றால் நாம் அறிந்த வரையில் நாம் இறைவனின் சொரூபம், தெய்வ சுபாவம் என்று நமக்குத் தெரிந்தவற்றை பிரிவினைகளை பார்க்காமல் வெளிப்படுத்தினால், நம்மால் அதிமனம் நம்முள் இருப்பதை புரிந்துக் கொள்ள முடியும். அதிமன நிலையை யாராவது அடைந்து இருக்கிறார்களா? அவர்களோ, அல்லது நம் முன்னோர்களோ இது பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா, வேறு ஏதாவது குறியீடுகள் உள்ளதா, அதற்கு அவர்கள் என்ன பெயர் தந்திருக்கிறார்கள் என்று ஆராய்ந்து அதிலிருந்து ஒரு ஆரம்பத்தை starting point -ஐ எடுத்துக் கொள்ளலாம் என்கிறார் பகவான். அந்த வார்த்தைகளை மேலே சொன்னபடி நடைமுறைக்கு ஒரு ஆரம்பத்திற்கு என்று எடுத்துக் கொள்கிறேன். இங்கு புரிந்துக் கொள்ள வேண்டிய முக்கியமான அடிப்படை அதிமனம் ஒரு முழுமையை உணர்த்த அதை நோக்கியே எப்போதும் இருக்கும், ஒன்றி இருக்கும், ஒரு சத்திய சித்தம். Truth Consciousness . அது ஒருமை, unity , harmony , சுமுகம் என்னும் பார்வையில் தான் அனைத்தையும் பார்க்கும் என்பது தான். ஆனால் இந்த பிரபஞ்சத்தை அதில் பல வடிவங்களை, மனிதர்களை தனித்தனியாக படைத்த பிறகு எப்படி அது ஒருமையை பார்க்கிறது என்பது நமக்கு எழும் கேள்வி. மனதை வைத்து பிரித்து பார்ப்பதாக புரிந்துக் கொள்வோம். அதற்கு பெயர் division பிரிவினை. - ஆனால் அதிமனம் division மூலம் பார்ப்பதில்லை. differentiation செய்கிறது. வித்தியாசப்படுத்தி பார்க்கிறது.அப்படி வித்தியாசப்படும் போது ஒன்றில் இருக்கும் பலவற்றை

அல்லது பலவற்றில் இருக்கும் ஒருமையை பார்த்தே செய்கிறது. By differentiation, it brings out the one which involves the other. Supermind is between one and many என்கிறார். Supermind manifests potentials of the one while retaining unity. ஒருமையை பார்ப்பதன் மூலம் பரிணாமத்தில் முன்னேறுகிறது. அதனால் புதிதாக ஒன்றை படைக்கிறது என்கிறார்.

நான் என் சொந்த brand -இல் product கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்தவுடன் அதை செம்மைப்படுத்த sample கள் ஆராய்ச்சிகள், testing என்று ஏராளமாக செய்துக் கொண்டு இருந்தேன். அது ஒரு தொடர் செயல், continuous process என்பதால், என் கம்பெனியின் முக்கியமான நபர்கள் அனைவரும் எப்போதும் இருக்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று சொல்லி இருந்தேன். ஏறாத்தாழ 17 லட்ஷம் செலவு செய்த பிறகும் perfectionon செம்மை வரவில்லை. நான் நினைப்பதை கொடுக்க உங்களுக்கு தெரியவில்லை என்று குறிப்பாக ஒருவரை குறை கூறினேன். அப்போது அவர் அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டாலும், இரு நாட்கள் கழித்து மேலும் சில தொழிலாளர்களை சேர்த்துக் கொண்டு ஊதிய உயர்வு கேட்டார். எனக்கு கோபம் வந்தது. இந்த critical ஆன நேரத்தில் அதை அவர் செய்வது blackmail என்று பட்டது. என் சூழ்நிலையை exploit செய்கிறார்கள் என்று பட்டது. அது பிரிவினை பார்ப்பது. அந்த சூழ்நிலையில் என்னால் எதுவும் முடிவு எடுக்க முடியாததால் , கர்மயோகிக்கு mail அனுப்பி கேட்டேன். அவர் உனக்கு prosperity வர போவது அவர் subconscious க்கு தெரிகிறது. அதனால் தான் அவர் அப்படி கேட்கிறார். உளமார சரி என்று சொல் என்றார். அந்த மனநிலை சரி என்று நீ உணர்ந்த பிறகு, நீ எப்படி prosperity -ஐ தேடுகிறாயோ, அது போலத்தான் அவரும் தேடுகிறார் என்று முழுதாக நம்பிய பிறகு அதைக் கொடுக்க சம்மதி என்றார். மிகக் கடினமாக இருந்தது. ஏதோ தோற்று விட்டோம் என்ற உணர்வே வந்தது. சம்மதிக்க மனமில்லை என்றாலும் வேறு வழி இல்லை. கர்மயோகி வேறு சொல்லிவிட்டார் என்பதால் மனதை தேற்றிக் கொண்டு சம்மதித்தேன். அவருக்கும் சந்தோஷம். மறுநாளே நான் எதிர்பார்த்த செம்மை என் product க்கு வந்தது. அது இன்று வரை வருமானத்தையும் ஆனந்தத்தையும் தந்துக் கொண்டு இருக்கிறது. இது நானும் அவரும் பிரிந்து இருந்தாலும், வித்தியாசப்பட்டு இருந்தாலும், அதிலும் ஒரு ஒருமையை பார்ப்பதால் அது அதிமன தன்மை என்பதால் பகவான் சொன்னது போல supermind manifest potential of the one while retaining unity என்பதற்கு உதாரணமாக ஒரு புது படைப்பு, product ஏற்பட்டது.

நாம் பிரிவினை, தீமை, நன்மை என்று பார்க்கும் அத்தனை இடங்களிலும் இத்தகைய ஒருமையை கவனத்துடன், விழிப்பான சித்ததுடன் பார்க்க வேண்டியது அவசியம். உதாரணமாக மின்சாரத்தை எடுத்துக் கொள்வோம். அதை சரியாக கையாளவில்லை என்றால் shock அடிக்கும், இறப்பு கூட நேரிடலாம். ஆனால் அது நம் கண்ணில்படாமல் , நாம் தான் சரியாக கையாள வேண்டும் என்று எடுத்துக் கொண்டு மின்சாரத்தை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் பாம்பிற்கு விஷமிருக்கிறது. அதை பார்த்தாலே நமக்கு பிடிக்கவில்லை. பயம் வருகிறது. அடிக்கப் போகிறோம். ஆனால் மின்சாரம் போல பாம்பின் விஷமும் நமக்குத் தேவை தான் இரண்டையும் படைத்தது ஒரே பிரம்மமே என்று நம்மால் நினைக்க முடியுமா? அந்த முழுமையை பார்க்கும் சித்தப்பூர்வமாகியிருப்பது நாம் சத்திய சித்தத்தில், அதிமனதில் இருப்பது. இந்த கண்ணோட்டத்தில் நல்லது வளர தீயது தேவை, உண்மை வளர பொய் தேவை, நாடு வளம் பெற லஞ்சம் தேவை, நாடு முன்னேற பணவீக்கம் தேவை என்பது போன்ற புரட்சிகரமான கருத்துக்களை கொண்டு பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார் கர்மயோகி. அவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடிந்தால், நாம் அதிமனதை புரிந்துக் கொண்டோம், அதை ஏற்றுக் கொண்டோம் என்று பொருள். அதற்கு உதாரணமாக நெருப்பையும், அதன் சூடையும் எடுத்துக் கொள்ளலாம். ஒன்றை பார்க்கும் போது இன்னொன்றை பார்ப்பதில்லை. இரண்டும் ஒரே வெளிப்பாட்டின் இரண்டு அம்சங்கள் என்பது புரிந்தாலும் அதன் மீது நம் சித்தம் இருப்பதில்லை. அதனால் நெருப்பு சுடும் என்று தெரிந்தாலும் இன்று வரை அடுப்பில், விளக்கு ஏற்றும் போது, பட்டாசு வெடிக்கும் போது, சுட்டுக் கொண்ட அனுபவங்கள் எல்லோருக்கும் இல்லாமல் இருக்காது.

நம்மெல்லோருக்கும் prism தெரியும். ஒரு புறம் வெள்ளை ஒளி பாய்ச்சினால், மறு புறம் பல வண்ணங்களாகப் பிரிந்து தெரியும். சிறு குழந்தைகளுக்கு அது magic போல இருக்கும். சற்றே அறிவு வளர்ந்த பின் வெள்ளை ஒளி தான் அப்படி பலவாக பிரிந்தது என்றோ, பல நிறமும் வெள்ளை ஒளிக்குள் அடக்கம் என்றோ புரியும். நமக்கு வாழ்வு magic போல இருக்கிறது. புரியவில்லை. மாயை என்று இருக்கிறது. . ஆனால் அத்தனைக்கும் பின்னால் இருப்பது ஒரு சித்தமே என்றோ, அல்லது ஒரு சித்தத்தின் பல ரூபங்கள் , வெளிப்பாடுகள், செயல்களே நடப்பவை என்றோ நினைக்க ஆரம்பித்தால், அதிமனம் நமக்குப் புரியும். ஒன்றிரண்டாவது செய்து பார்க்க முடியும்.

நான், என் அறிவு நிலை என்று எடுத்துக் கொண்டால், சராசரிக்கும் குறைவானவனே. Impulse ஆக mood க்கு தகுந்தாற் போல நடப்பவன். அப்படிப்பட்ட நானே இவற்றை என் வாழ்வில் பொருத்தி பார்க்கும் போது,

அத்தகைய நிகழ்வுகள் என் வாழ்வில் நடந்து இருக்கின்றன என்று கவனிக்கும் பக்குவம் அவ்வப்போது வருகிறது என்றால், இதை எல்லோரும் செய்ய முடியும் என்றே பொருள். அன்னையிடம் வந்த பிறகு திருவுருமாறிய இடங்கள், miracles என்று நடந்த இடங்கள், அன்னை தான் பலித்தார், நான் இல்லை என்று சொல்லும் இடங்கள் போன்றவற்றை அதிமனப்பார்வையில், அதன் சட்டம், நோக்கம், ஆகியவற்றின் பார்வையில் பார்த்தால், இதை புரிந்துக் கொள்ள முடியும். நமக்கு புரிய வேண்டியது அதிமனம் தான் நம்மையும், பிரபஞ்சத்தையும் பிரம்மத்தையும் இணைப்பது. சித்த பூர்வமாக அதில் நிலைப்பது நம் படைப்பின் நோக்கம். அதுவே அதற்கு ஆனந்தம் என்பது புரிய வேண்டும். Supermind is the mediator between Satchidananda and the world to manifest its Ananda என்கிறார். அதன் மூலம் தான் நாம் பலவாக இருப்பதில் இருந்து ஒன்றாக முடியும். Supermind is the link by which one manifest many and then many gains oneness என்கிறார். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஓரளவாவது சொத்து சேர்த்துவிட்டு போக வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது முடியாதவர்கள் அவர்களுக்கு நல்ல கல்வி கொடுத்து நன்றாக சம்பாதிக்க வைத்து அதை தர நினைக்கிறார்கள். சிலர் இரண்டும் அவசியம் என்று முயல்கிறார்கள். ஆனால் உண்மையில் இவற்றின் பலன் அவர்களுக்கு முழுமையாக, நிம்மதியாக, ஆனந்தமாக அந்த குழந்தைகளுக்கு சேர வேண்டும் என்றால், இவற்றோடு சேர்ந்து உயர்மனப்பான்மையை உயர் பண்பை தருவதாலேயே முடியும் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். சித்த முன்னேற்றத்த்திற்கான அந்த உண்மை, முழுமையாக  புரிந்தால், அது அதிமனம் ஆகிறது. அதற்கு short cut ஆக தான் சமர்ப்பணம் என்பதை சொல்கிறார். சமர்ப்பணம் செய்து ஒன்றை செய்யும் போது, நாம் நம் உயர்ந்த பண்பால், நாமறிந்த உயர்ந்த நிலையில், உயர்ந்த சுபாவத்தில் நிற்போம். அதை செய்பவர்களுக்கு Life Divine குறிப்பாக இந்த அத்தியாயம் நன்றாக புரியும் என்கிறார்.

அப்படி நமக்கு இந்த அத்தியாயம் புரியும் போது குறைந்த பட்சம் Comprehending Supermind  - தொகுத்தறியும் சித்தம் என்பது self-guiding idea வாக அதாவது அதிமன நோக்கில் அதனுடன் ஒன்றும் idea வாக சத்திய சித்தத்தின் உருவமாக, அதை அடையும் ஆர்வமாக இருக்க வேண்டும். அந்த விழிப்புணர்வே இங்கு நமக்கான real idea என்ன என்பதைக் காட்டும். அந்த நிலையில் நம் ஞானம், நம் உறுதியில் இருந்து பிரிக்கப்படவில்லை என்பதால் அதுவே அதிமனம், பின் அதை வெளிப்படுத்தும் விதத்தை ஒருமை, சுமுகம் என்ற அதிமனதின் அடிப்படை ஆனந்தத்தில் இருந்து பார்க்கும் போது, அது நமக்கான apprehending Supermind பகுத்தறியும் சித்தமாக அமையும்.

நாம் இவற்றுக்கான முயற்சிகளை செய்வதில்லை முயன்று பார்ப்பதில்லை. ஒரு விஷயத்தை செய்து பார்த்து புரிந்துக் கொள்ள, Token act என்னும் முறையை கர்மயோகி சொல்லிக் கொடுத்தார். நாம் அதை செய்து கற்றுக் கொள்ள, அந்த நிலைகளை அனுபவித்து அறிய நினைப்பதில்லை. படிப்படியாக நாம் நம் சுய வெளிப்பாட்டின் காரணமாக நாம் அந்த உயர்ந்த நிலைகளை எட்ட முடியும். மனித அறிவை உயர்த்துவதற்கு, மனப்பான்மையை உயர்த்துவதற்கு, இன்னும் அதிகமாக செயல்பட வைப்பதற்கு அதிமன சக்தியை உபயோகப்படுத்த முடியுமா? நம்மை நாமே மேம்படுத்த முடியுமா? அறிவு, திறமை, திறன், ஆகியவற்றை உயர்த்த முடியுமா? புதிய திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியுமா? என்றால் அனைத்து கேள்விகளுக்கும் கர்மயோகியின் ஒரே பதில் முடியும் என்பது தான்.

நம் மனம் எப்போது எல்லாம் அதிமனதோடு தொடர்பு கொள்கிறதோ, அப்போது எல்லாம் அது ஒளியை பெறுகிறது. அதனால் மனமும் உயர் ஞானத்தை, உயர் ஆற்றலை, அதை செயல்படுத்தும் உறுதியை பெறுகிறது. அதனால் மனம் ஒரு கணம் மாறினாலும் நிறைய விஷயங்கள் மாறுகிறது. காரணம் அந்த நிலையில் நம் மனம், ஞானம் உறுதி, ஆற்றல் ஆகியவை பிரிந்து இல்லாமல் ஒருமையில் இருப்பதால் அந்த ஒரு கணத்தில் அதிமனதை தொடுகிறோம். அது உயர்சித்தமாக மாறுவது மட்டுமல்ல, ஒரு புதியதை படைக்கும் ஆற்றலாகவும் இருக்கிறது. அதிமனதின் ஒரு ஸ்ருஷ்டி தான் மனம் என்பதால் மனதுள் அதிமனம் இருக்கிறது என்பதே உண்மை. அது உணர்வுபூர்வமாக புரிய வேண்டும். நம் பகுத்தறிவு, தர்க்கம் ஆகியவை அதை நம்ப வேண்டும். என்னால் முடியாது. எனக்கு மனமில்லை, எனக்கு மனம் வரவில்லை, மனம் ஏற்றுக் கொள்ளவில்லை, depression , வெறுப்பு, எரிச்சல், ஏக்கம், ஏமாற்றம் என்று மனதின் மூலம் நாம் உணரும் அனுபவிக்கும் துன்பங்கள் ஏராளம். இந்த நிலையில் நாம் அதிமன நிலையை எப்படி பெறுவது. மனதிற்கு அதற்கான சக்தி ஆற்றல் இல்லை என்பதை புரிந்து கொண்டு, நம் மனதில் தான் அதிமனம் உள்ளது என்று புரிந்து, மனதை - அதிமனதிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போது நாம் சாதிக்க தேவையான விஷயங்கள், முன்னேற தேவையான விஷயங்கள் நம் கண்ணில் படும். அது நாம் விரும்புவதை படைக்க முடியும், என்னும் நம்பிக்கை, ஆர்வம் அதற்கு தேவையான ஞானம், தைரியம், ஆகியவற்றை நமக்குத் தர வேண்டும். ஆனால் நம் மனமோ வரையறைக்கு உட்பட்டு, அபிப்ராயங்கள், எதிர்பார்ப்புகள், ஆசைகள் என்று சுயநலத்தின் பார்வையில் பார்த்து, ஒரு எல்லைக்கு உட்பட்டு இருக்கிறது. அது அந்த வரையறையில் இருந்து

வெளியே வரும் போது, தன்னை விரிவு[ப்படுத்த முயலும் போது, குறைந்த பட்சம் அதிமனதோடு தன் நிலையை ஒப்பிட்டு தன் நிலையை , இனம் கண்டு கொள்ள முடியும். உயர்திக் கொள்ள முடியும். நம் மனம் ஏராளமான வழிகளில் செயல்படுவது நமக்குத் தெரியும். அது போல அதிமனதுடன் ஒப்பிட்டு பார்க்கும், இணைத்துப் பார்க்கும், வேலையையும் அதனால் செய்ய முடியும். அந்த ஒருமை, வித்தியாசத்தை உணர்தல், சுமுகம் போன்ற அதிமனதின் பண்புகள் என்பதால் அதனுடன் ஒன்ற முடியும். இது சிறு விஷயமாகத் தோன்றினாலும், அந்த வேலையை  நம்மால் தொடர்ந்து செய்ய முடியவில்லை என்கிறார். அந்த சிறு வெற்றியைக்  கூட மனதின் மேல் நம்மால் நிலை நாட்ட முடியவில்லை என்கிறார் கர்மயோகி.

அதற்கு முதல் வழியாக அவர் முயன்று பார்க்கச் சொல்வது ஒவ்வொன்றை செய்ய தோன்றும் போதும், இது ஆசையா, தேவையா என்ற கேள்வியை மனதின் முன் வைப்பது. அடுத்தது இந்த செயலில் என் விருப்பம் எது, அதாவது என் நோக்கம், பண்புகள் எது, இந்த செயலில் அன்னையின் விருப்பம் எது, அவர் விரும்பும் நோக்கம், பண்புகள் எது, என்ற கேள்வியை கேட்டுக் கொள்வது நம் மனதை அதிமனதிடம் ஒப்படைப்பது. அந்த ஆரம்பம் சமர்பணத்திற்கும், சரணாகதிக்கும் நம்மைக் கொண்டு செல்லும். ஒன்று பரிணாமவளர்ச்சியை பெற்று அன்னையிடம் ஒன்றுவோம் அல்லது சித்தத்தில் உயர்ந்த பூரணத்துவம் பெறுவோம். அதுவே பிரம்மம் விரும்பிய ஆனந்தம். இப்படி அன்னையை வைத்து கேள்வி எழுப்புவது போல - படைப்பாற்றல் உள்ளது என்று நாம் நினைக்கும் எதுவும் அதற்கான பலனைத் தரவில்லையென்றால், அதன் பார்வையில் நாம் கேள்வி கேட்டால், அதற்கான விடை கிடைக்கும். உதாரணமாக Freedom சுதந்திரம் படைப்பாற்றல் கொண்டது என்றால், நாம் சுதந்திரமாக சில விஷயங்களில் இருப்பதாக நினைத்தால் அது ஏன் ஆனந்தத்தை தரவில்லை என்று பார்த்தால், சுதந்திரத்தை நம் மனம் விரும்பவில்லை அல்லது அதன் முழு பொருளை, முழுமையாக  புரிந்துக் கொள்ளவில்லை என்பது புரியும், எதிர்பார்ப்பு இல்லாத, பற்றில்லாத சமநிலையே அதிமனதிற்கு சுதந்திரம் என்பது புரியும். உதாரணமாக ஊக்கம் motivation என்பது என்னை பொறுத்தவரை படைப்பாற்றல் கொண்டது என நினைக்கிறேன் . பல நேரங்களில் நான் ஆரம்பிக்கும் காரியங்களை ஏன் சரியாக முடிக்க முடிவதில்லை. அல்லது அதன் மூலம் நான் பெற நினைத்த ஆனந்தத்தை பெற முடிவதில்லை. அது ஊக்கம் என்னும் பண்பின் மேல் இருக்கும் தவறல்ல. நம் பார்வை அதில் இருந்து  விலகி விட்டதால் ஏற்பட்ட தவறு. உதாரணமாக ஆரம்பத்தில் இந்த கூடலில் கலந்துக் கொண்டு பேசும்படி சமர்ப்பணN சொன்ன போது,

அதற்கான ஞானம், உறுதி, அதற்கான ஊக்கம் என்று அனைத்துடன் தான் ஆரம்பித்தேன். ஆனால் இது வரை ஒவ்வொரு முறையும் பேசி முடித்த பிறகு, இத்துடன் போதும் என்றே நினைப்பேன். காரணம் என் உச்சரிப்பு, தமிழ், படிக்கும் வேகம் ஆகியவற்றின் மேல் எனக்கு இன்னும் control வரவில்லை என்னும் எண்ணம் அதிகமாக இருந்தது. என் உழைப்புக்கு ஏற்ற ஆனந்தத்தை அது தராதது போல் இருந்தது. இது போன்ற நேரங்களில் முட்டுச்சந்தில் நிற்பது போலஇருக்கும்போது ஏன் இப்படி நிற்கிறோம் என்பதில் ஆரம்பி என்கிறார்., When we hit the wall – expand thinking on why you lost the way என்று கர்மயோகி கூறுகிறார். அப்படி உணரும் நேரங்களில் அந்த படைப்பாற்றலின் பார்வையில் கேள்வி கேள் என்கிறார். இங்கு ஊக்கம் படைப்பாற்றல் கொண்டது என்ற பார்வையில் நான் பார்க்கும் போது, எதற்காக ஒத்துக் கொண்டேன், யாருக்காக செய்ய நினைத்தேன், எதற்காக செய்ய நினைத்தேன், என் எந்த எதிர்பார்ப்பு, அதற்கு அடிப்படையாக இருந்தது, எந்த ஆனந்தத்திற்கு இதை செய்தேன், எந்த திறமை மேல், யார் மேல் நம்பிக்கை வைத்து இதை செய்தேன் போன்ற கேள்விகள் கேட்ட போது கிடைத்த பதில்கள், என் நோக்கம், அதற்கான திட்டம், அதற்கான பண்பு எல்லாவற்றில் இருந்தும் வெகு தூரம் தள்ளி வந்து விட்டது தெரிந்தது. அதை மீண்டும் சரி செய்த போது, கடந்து மூன்று நான்கு கூடல்களாக பாராட்டுகள் அதிகமாக இருக்கிறது. அது ஆனந்தத்தை தருகிறது. அது மேலும் மேலும் ஈடுபடுவதற்கான ஊக்கத்தை தருகிறது. அதாவது நான் ஊக்கத்துடன் ஒன்றிவிட்டேன். அது படைக்கிறது.

இப்படி நம்மில் நாமறிந்த பல நிலைகளில் அதிமனதை பொருத்தி பார்க்க வேண்டும். இதுவே சரி என்பது அல்ல. அதே நிலையில், அதே நினைவில், அதே சூழலில் இருக்க அது உதவும்.

இந்த அத்தியாயத்தின் தொடர்ச்சியை அடுத்த கூடலில் பகிர்ந்துக் கொள்கிறேன்.

==================================================